இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 14-12-2024

# முதல்வரின் உறுதியும் பழனிசாமியின் உளறலும் அண்ணாமலையின் பிதற்றலும்

டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க விடமாட்டோம் என்பதை சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிக் காட்டியதன் மூலமாக தனது உறுதியை நிலை நிறுத்தி விட்டார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாளை 'வரலாற்றுச் சிறப்பு நாள்' என்று சூழலியல் ஆர்வலர்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

மதுரை மாவட்டம் - மேலூர் வட்டம் - நாயக்கர்பட்டி கிராமத்தில் டங்ஸ்டன் கனிமச் சுரங்கம் அமைப்பதற்கு அனுமதியை 'ஹிந்துஸ்தான் ஜிங்க்' நிறுவனத்துக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு வழங்கியுள்ளது. இன்றியமையாத மற்றும் "முக்கியக் கனிமங்களுக்கான உரிமங்களை மாநில அரசின் அனுமதி இன்றி ஒன்றிய அரசு ஏலம் விடக்கூடாது" என்று தமிழ்நாடு அரசு 3.10.2023 அன்று ஒன்றிய அரசுக்கு வலியுறுத்திச் சொல்லி இருக்கிறது. இதனை மீறி ஏலம் விட்டுள்ளது பா.ஜ.க. அரசு.

'டங்ஸ்டன்' உரிமம் வழங்கப்படும் பகுதியானது குடைவரைக் கோயில்களும், சமணச் சின்னங்களும், பஞ்ச பாண்டவர் படுகைகளும், தமிழ் பிராமி வட்டெழுத்துகளும் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க பகுதியாகும். அரியவகை உயிரினங்களும் உள்ளன. எனவே, அதனை 'பல்லுயிர் பெருக்கத் தலமாக' 2022 ஆம் ஆண்டே தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இதனை மீறியும் ஏலம் விட்டது ஒன்றிய அரசு. இது கவனத்துக்கு வந்ததும், 'அனுமதிக்க மாட்டோம்' என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பிரதமருக்கு கடிதம் அனுப்பினார் முதலமைச்சர்.

மதுரை வட்டாரத்தில் போராட்டம் நடத்திய மக்களிடம் மாண்புமிகு அமைச்சர் மூர்த்தியை அனுப்பி, 'எந்தச் சூழலிலும் தமிழ்நாடு அரசு அனுமதி தராது' என்று சொல்ல வைத்தார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். சட்டமன்றத்தில் இதற்கான தீர்மானத்தையும் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைத்தது தமிழ்நாடு அரசு.

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, "இந்தத் தீர்மானத்தை அ.தி.மு.க. சார்பில் வரவேற்று ஆதரித்து வாக்களிக்கத் தயாராக இருக்கிறோம்" என்று சொல்லி இருக்க வேண்டும். அதை விட்டு, தி.மு.க.வைக் குற்றம் சாட்டுவதில் கவனம் செலுத்தினார் பழனிசாமி. முதலமைச்சர் அவர்களின் பதிலில் தெறித்த தெளிவு, பழனிசாமியை பதட்டம் அடைய வைத்துவிட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகமிகத் துணிச்சலாக அளித்த தனது பதில்களில்…

**★ ஒன்றிய அரசு இந்த விஷயத்தில் ஏலம் விட்டுவிட்டதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில், நிச்சயமாகச் சொல்கிறேன். ஒன்றிய அரசு ஏலம் விட்டாலும், நிச்சயமாக, உறுதியாக இந்த அரசு அதற்குரிய அனுமதியைத் தருவதற்கான வாய்ப்பே கிடையாது. அதிலே திட்டவட்டமாக இருக்கிறோம். இதுதான் முடிவு.**

**★ திரும்பத் திரும்ப ஒன்றைத் தெளிவாகச் சொல்கிறேன். நான் முதலமைச்சராக இருக்கிற வரையில் நிச்சயமாக ஒன்றிய அரசு இந்தத் திட்டத்தைக் கொண்டுவர முடியாது. வந்தால் அதைத் தடுத்தே தீருவோம்.**

**★ திரும்ப, திரும்பச் சொல்கிறேன்; நான் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக இருக்கின்ற வரையிலே, நிச்சயமாக நாங்கள் அனுமதிக்க மாட்டோம்; அனுமதிக்க மாட்டோம்; அனுமதிக்க மாட்டேன்.**

**★ எந்தக் காரணத்தைக் கொண்டும் தமிழ்நாட்டிற்குள் ஒன்றிய அரசால் போடப்படக்கூடிய இந்தத் திட்டம், நிச்சயம் வரக்கூடிய வாய்ப்பு இருக்காது, அதைத் தடுத்து நிறுத்துவோம். அப்படி ஒரு சூழல் வந்தால் இந்தப் பொறுப்பில் நான் இருக்க மாட்டேன்; முதலமைச்சர் பொறுப்பில் இருக்க மாட்டேன் என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்.**

- என்று சொன்னார்கள். இதனை விட உறுதியும் இறுதியுமான தீர்ப்பு இருக்க முடியாது. அதன்பிறகாவது பழனிசாமி அமைதியாக இருந்திருக்க வேண்டும். 'நாடாளுமன்றத்தில் இத்தனை பேர் இருக்கிறீர்களே? கனிம வளச் சட்டம் வந்த போது என்ன செய்தீர்கள்?' என்று கேட்டார் பழனிசாமி. "தி.மு.க. சார்பில் கடுமையாக எதிர்த்தோம்" என்பதை முதலமைச்சர் பதிவு செய்தார். "அ.தி.மு.க. சார்பில் ஆதரித்தது ஏன்?" என்று கேட்டபோது பழனிசாமியால் பதில் அளிக்க முடியவில்லை.

கனிம வள மசோதாவை அ.தி.மு.க. சார்பில் மாநிலங்களவையில் தம்பிதுரை ஆதரித்துப் பேசியது வெளிச்சத்துக்கு வந்தது. "நான் மசோதாவைத்தான் ஆதரித்தேன், டங்ஸ்டன் சுரங்க ஏலத்தை ஆதரிக்கவில்லை" எனத் திரு. தம்பிதுரை அவர்கள் மழுப்பினார்.

அ.தி.மு.க. ஆதரவில் நிறைவேறிய சட்டத் திருத்த மசோதாதான், டங்ஸ்டன் சுரங்கத்தை ஏலம் விடும் அதிகாரத்தை மாநில அரசிடம் இருந்து பிடுங்கி மோடி அரசிடம் கொடுக்கக் காரணமானது. 'டங்ஸ்டன்' உள்ளிட்ட சில அரிய கனிமங்களை ஒன்றிய அரசு மட்டுமே ஏலம் விட முடியும் என்கிற சட்டத் திருத்தத்தைத்தான் தம்பிதுரை ஆதரித்தார். இதனையும் ஆதாரத்துடன் அம்பலப்படுத்தினார் முதலமைச்சர் அவர்கள். அதன் பிறகு மூச்சுப் பேச்சில்லாமல் ஆகிவிட்டார் பழனிசாமி.

இதற்கிடையில் பா.ஜ.க. அண்ணாமலை ஒரு அறிக்கை வெளியிட்டார். அந்த அறிக்கையைப் படித்தவர்கள் அனைவருக்கும் தலைவலி வந்திருக்கும். ஒன்று டங்க்ஸ்டனை ஆதரிக்க வேண்டும். அல்லது எதிர்க்க வேண்டும். லண்டனில் படித்துவிட்டு வந்ததால் ஆதரித்து எதிர்த்துள்ளார் அண்ணாமலை.

தி.மு.க. அரசின் முழுமையற்ற தகவல்களால் மக்கள் எதிர்த்தார்களாம். திட்டத்தைக் கைவிட ஒன்றிய அமைச்சரிடம் இவரே சொன்னாராம். விவசாயிகளுக்கு எதிராக பிரதமர் செயல்பட மாட்டாராம். ஒன்பது வரிக்குள் ஒன்பது பல்டிகள். அண்ணாமலை லண்டனில் கற்ற பாடம் இதுதான் போலும்!

"தி.மு.க. அரசு இதனைச் செயல்படுத்த விடாது" என்று முதலமைச்சர் காட்டிய உறுதியானது, எதிர்க்கட்சிகளின் அனைத்து பொய் மலைகளையும் தவிடு பொடியாக்கிவிட்டது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.12.2024) கேரள மாநிலம், வைக்கத்தில், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் தலைமையில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவில், 2024–ஆம் ஆண்டிற்கான வைக்கம் விருதினை கர்நாடக மாநிலம், மைசூரு மாவட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளரும், சமூக ஆர்வலருமான தேவநூர மஹாதேவா அவர்களுக்கு வழங்கி சிறப்பித்தார். இவ்விழாவில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கேரள கூட்டுறவு, துறைமுகங்கள் மற்றும் தேவஸ்தானத் துறை அமைச்சர் வி.என்.வாசவன், கேரள மீன்வளம், கலாச்சாரம் மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் சஜி செரியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.பிரான்சிஸ் ஜார்ஜ், தொல். திருமாவளவன், வைக்கம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி சி.கே.ஆஷா, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கேரள மாநில அரசின் தலைமைச் செயலாளர் திருமதி சாரதா முரளிதரன், கோட்டயம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜான் வி. சாமுவேல், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கேரளா - 'வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார்' நூற்றாண்டு நிறைவு விழா!

# வைக்கத்தில் - தந்தை பெரியார் நினைவகம் - நூலகம் திறப்பு விழா!

## கேரள முதல்வர் பினராயி விஜயன் தலைமையில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**கோட்டயம், டிச.14 -**

**வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி கேரள மாநிலம், வைக்கத்தில் புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகம் மற்றும் நூலகத்தினை கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.12.2024) கேரள மாநிலம், வைக்கத்தில், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் தலைமையில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற "வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா"வில், புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகத்தை திறந்து வைத்தார். இவ்விழாவில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கேரள கூட்டுறவு, துறைமுகங்கள் மற்றும் தேவஸ்தானத் துறை அமைச்சர் வி.என்.வாசவன், கேரள மீன்வளம், கலாச்சாரம் மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் சஜி செரியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.பிரான்சிஸ் ஜார்ஜ், தொல். திருமாவளவன், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், கோட்டயம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜான் வி.சாமுவேல், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.12.2024) கேரள மாநிலம், வைக்கத்தில், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் தலைமையில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற "வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா"வில், புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகம் மற்றும் பெரியார் நூலகத்தை திறந்து வைத்தார்.

**1924 ஆம் ஆண்டு நடைபெற்ற வைக்கம் போராட்டம்!**

கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்திலுள்ள மகாதேவர் கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களிலும், கோவிலுக்கு எதிரே உள்ள தெருவிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த ஈழவர்கள், தீயர்கள், புலையர்கள் முதலான சமுதாயத்தினர் நடந்து செல்லவே கூடாது என்னும் கொடிய தடை இருந்தது. அந்தத் தடையை நீக்கக் கோரி 1924ஆம் ஆண்டு வைக்கம் போராட்டம் நடைபெற்றது.

வைக்கம், கேரள மாநிலத்தின் அன்றைய திருவாங்கூர் சமஸ்தானத்தில் அடங்கியிருந்த நகரமாகும். அந்நகரிலுள்ள மகாதேவர் கோவிலைச் சுற்றி அரசு அலுவலகங்கள், நீதிமன்றம் எல்லாம் இருந்தன.

ஈழவர் சமுதாயத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் மாதவன் என்பவர் தீண்டத்தகாதவர் என்பதால், அந்த நீதிமன்றத்திற்குள் செல்ல முடியாத நிலை அவருக்கு ஏற்பட்டது. இதனை எதிர்த்து வழக்கறிஞர் மாதவன், கேசவ மேனன், டி.கே.மாதவன், பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப் முதலான பலர் போராடினார்கள்.

**தீண்டாமைக்கு எதிராக போராடியவர்களை அடக்கிய கொடுமை**

போராட்டம் நடத்திய அனைவரையும் திருவாங்கூர் சமஸ்தான போலீசார் கைது செய்தனர். அதனால், போராட்டம் நின்றுவிடும் சூழ்நிலை உருவானது. அப்போது இறுதியாக கைதாகிச் சிறை சென்ற பாரிஸ்டர் ஜார்ஜ் ஜோசப், கேசவ மேனன் ஆகியோர் கையெழுத்திட்டு; அப்போது, தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த தந்தை பெரியார் அவர்களுக்குக் கடிதம் எழுதி, வைக்கம் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்தி வெற்றி தேடித் தேர வேண்டும் என்று வேண்டுகோள் வைத்தனர். அந்தக் கடிதம் கிடைத்ததும், 13.04.1924 அன்று வைக்கம் நகருக்கு வந்த தந்தை பெரியார் அவர்களால் போராட்டம் தீவிரம் அடைந்தது.

தந்தை பெரியார் அவர்கள் அனைத்து மக்களிடமும் வைக்கம் போராட்டம் குறித்து தமது சீர்திருத்த, சமூக நீதிக் கருத்துக்கள் மூலம் பிரச்சாரம் செய்ததால், போராட்டத்தில் பெருந்திரளான மக்கள் திரண்டதைக் கண்டு பொறுக்க முடியாத நிலையில், திருவாங்கூர் போலீசார் தந்தை பெரியார் அவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தனர். முதல் முறை 1 மாதமும், இரண்டாவது முறை 4 மாதமும் கடுங்காவல் தண்டனை வழங்கி, தந்தை பெரியார் அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்.

**திருவாங்கூர் சமஸ்தானத்தை பணியவைத்த பெரியார் போராட்டம்!**

வைக்கம் நகரைச் சுற்றியிருந்த கிராம மக்களும் திரண்டு தொடர்ந்து போராடியதால் திருவாங்கூர் சமஸ்தான அரசு பணிந்து, மகாதேவர் கோவில் தெருக்களில் ஈழவர் முதலான வகுப்பார் நடந்து செல்வதற்கு இருந்த தடையை நீக்கி, எல்லோரும் செல்லலாம் என்று ஆணை பிறப்பித்தது. வைக்கம் போராட்டத்தை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றதால் தந்தை பெரியார் அவர்கள் "வைக்கம் வீரர்" எனப் போற்றப்பட்டார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வைக்கம் போராட்டம் நடைபெற்று நூறு ஆண்டுகள் ஆனதையொட்டி, "வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டினையொட்டி தமிழ்நாடு அரசின் சார்பில் 2023 ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் நாள் தொடங்கி ஓராண்டு காலம் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படும்" என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 30.03.2023 அன்று விதி 110இன் கீழ் அறிவித்தார்.

அதன்படி, சென்னை, பெரியார் திடலில் 28.12.2023 அன்று நடைபெற்ற "வைக்கம் போராட்டம்" நூற்றாண்டு சிறப்பு விழாவில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் 'தமிழரசு' அச்சகத்தின் சார்பில் தயாரிக்கப்பட்ட "வைக்கம் போராட்டம் (1924 2023) நூற்றாண்டு மலரினை" தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வெளியிட, கேரளா மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் பெற்றுக்கொண்டார். இவ்விழாவில், "பெரியாரும் வைக்கம் போராட்டமும்" என்ற நூலை கேரளா மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் வெளியிட்டார்.

வைக்கம் வீரர் தந்தை பெரியார் நினைவாக, அந்நகரில் தந்தை பெரியார் நினைவகமும், பெரியார் நூலகமும் தமிழ்நாடு அரசால் கட்டப்பட்டுள்ளது. தந்தை பெரியார் அவர்கள், வைக்கம் போராட்டத்தில் பங்கேற்ற நூற்றாண்டு நிறைவினைக் கொண்டாடுவதற்காக வைக்கம் நகரில் உள்ள தந்தை பெரியார் நினைவகத்தையும், நூலகத்தையும் புதுப்பித்திட 8 கோடியே 14 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்.

**5000 புத்தகங்கள் இடம் பெற்ற பெரியார் நினைவக நூலகம்!**

அதன்படி, தமிழ்நாடு அரசின் பொதுப்பணித் துறையால் புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகம் மற்றும் நூலகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் திறந்து வைத்தார். இப்பெரியார் நினைவகத்தில் புகைப்படக் காட்சி கூடம், திறந்த வெளி அரங்கம், சிறுவர் பூங்கா ஆகியவையும், நூலகத்தில், 5000க்கும் மேற்பட்ட தமிழ், ஆங்கிலம் மற்றும் மலையாள மொழி புத்தகங்களும் இடம்பெற்றுள்ளன.

அதனைத் தொடர்ந்து, 2024 ஆம் ஆண்டிற்கான வைக்கம் விருதினை கர்நாடக மாநிலம், மைசூரு மாவட்டத்தை சேர்ந்த எழுத்தாளரும், சமூக ஆர்வலருமான தேவநூர மஹாதேவா அவர்களுக்கு, விருதுடன் ஐந்து இலட்சம் ரூபாய்க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழ் மற்றும் பதக்கம் ஆகியவற்றை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், கேரள கூட்டுறவு, துறைமுகங்கள் மற்றும் தேவஸ்தானத் துறை அமைச்சர் வி. என். வாசவன், கேரள மீன்வளம், கலாச்சாரம் மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் சஜி செரியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கே.பிரான்சிஸ் ஜார்ஜ், தொல். திருமாவளவன், அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் திருமதி சி.கே. ஆஷா, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கேரள மாநில அரசின் தலைமைச் செயலாளர் திருமதி சாரதா முரளிதரன், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், கோட்டயம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஜான் வி. சாமுவேல், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.